

# தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருநெல்வேலி மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பா.வில்சன் மணிதுரை அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருநெல்வேலி மத்திய மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம்/ பகுதி/பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 23.06.2025 | நாரணம்மாள்புரம் சங்கர் நகர் பேரூர் | 9–வது பேருந்து நிலையம் | நெல்லை இ.முத்தையா<br>சே.ரகுமாள் |
| 2 | | மானூர் கிழக்கு ஒன்றியம் | அலவந்தான்குளம் | கவிஞர் சு.த.மூர்த்தி<br>பொ.கந்தபரமேஸ்வரன் |
| 3 | 24.06.2025 | மானூர் தெற்கு ஒன்றியம் | கொண்டாநகரம் | நெல்லை மணி<br>சே.ரகுமாள் |
| 4 | | நெல்லை பேட்டை பகுதி | பழையபேட்டை பஜார் | சி.பா.ராவணன்<br>ப.அகமது சுல்தானா |
| 5 | 25.06.2025 | பாளையங்கோட்டை பகுதி | ராஜகோபால சுவாமி கோவில் அருகில் | சி.பா.ராவணன்<br>சே.ரகுமாள் |
| 6 | 26.06.2025 | மானூர் மேற்கு ஒன்றியம் | கானார்பட்டி சர்ச் | நெல்லை இ.முத்தையா<br>ப.அகமது சுல்தானா |
| 7 | 27.06.2025 | தச்சநல்லூர் பகுதி | அம்மன் சன்னதித் தெரு, டவுன். | 'மைக்' மணி<br>பொ.கந்தபரமேஸ்வரன் |
| 8 | 28.06.2025 | மேலப்பாளையம் பகுதி | காமராஜர் சாலை | நெல்லை மணி<br>ப.அகமது சுல்தானா |

**திருநெல்வேலி**

நாள் : 18-06-2025

கலைஞர் 100 1924 - 2023





# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ச.சண்முகம் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 23.6.2025 | புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம் | புத்தாம்பூர் | ஆரணி க.மாலா<br>சொ.தமிழினியன் |
| 2 | | புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம் | கருப்புடையாம்பட்டி | ஆரணி க.மாலா<br>சொ.தமிழினியன் |
| 3 | 24.6.2025 | விராலிமலை மேற்கு ஒன்றியம் | கொடும்பாளூர் | ஆரணி க.மாலா<br>சொ.தமிழினியன் |
| 4 | | அன்னவாசல் தெற்கு ஒன்றியம் | எண்ணை | ஆரணி க.மாலா<br>சொ.தமிழினியன் |
| 5 | 25.6.2025 | அன்னவாசல் வடக்கு ஒன்றியம் | கீழக்குறிச்சி | தூத்துக்குடி க.சரத்பாலா<br>மயிலாடுதுறை ஆர்.மதுமிதா |
| 6 | | குன்றாண்டார் கோவில் மேற்கு ஒன்றியம் | கீரனூர் பேரூர் | தூத்துக்குடி க.சரத்பாலா<br>மயிலாடுதுறை ஆர்.மதுமிதா |
| 7 | 26.6.2025 | கறம்பக்குடி வடக்கு ஒன்றியம் | அம்புக்கோவில் | மு.பசும்பொன் ரவிச்சந்திரன்<br>நாகை இரா.ப்ரீத்தி |
| 8 | | கறம்பக்குடி தெற்கு ஒன்றியம் | புதுப்பட்டி | மு.பசும்பொன் ரவிச்சந்திரன்<br>நாகை இரா.ப்ரீத்தி |
| 9 | | கறம்பக்குடி வடக்கு ஒன்றியம் | அம்புக்கோவில் முக்கம் கடைவீதி, கறம்பக்குடி பேரூர். | மு.பசும்பொன் ரவிச்சந்திரன்<br>நாகை இரா.ப்ரீத்தி |
| 10 | 27.6.2025 | அன்னவாசல் வடக்கு ஒன்றியம் | சின்னக்கடைவீதி, இலுப்பூர் பேரூர். | மன்னை சோம.இளங்கோவன்<br>நாகை இரா.ப்ரீத்தி |
| 11 | | அன்னவாசல் தெற்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் அருகில், அன்னவாசல் பேரூர். | மன்னை சோம.இளங்கோவன்<br>நாகை இரா.ப்ரீத்தி |

**புதுக்கோட்டை**

நாள் : 18-06-2025



## கீழடி: தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் பணியிட மாற்றம்!

# வரலாற்றையே பழிவாங்கத் துடிக்கும் பா.ஜ.க. அரசின் வன்மத்தின் வெளிப்பாடு!

## 'தீக்கதிர்' தலையங்கத்தில் காட்டம்!

சென்னை, ஜூன் 19– ஒன்றிய ஆட்சியாளர்கள் விருப்பப்படி கீழடி ஆய்வறிக்கையை திருத்தி எழுதித் தர மறுத்த தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் பணியிட மாற்றம் வரலாற்றையே பழிவாங்கத் துடிக்கும் வன்மத்தின் வெளிப்பாடு என 'தீக்கதிர்' நாளேடு 18.6.2025 அன்று தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அத் தலையங்கம் வருமாறு:

ஒன்றிய ஆட்சியாளர்கள் விருப்பத்திற்கேற்ப கீழடி ஆய்வறிக்கையை திருத்தி எழுதித் தர மறுத்த காரணத்திற்காக தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இது ஒரு அதிகாரிக்கு எதிரான பழிவாங்கும் போக்கு மட்டுமல்ல, வரலாற்றையே பழிவாங்கத் துடிக்கும் வன்மத்தின் வெளிப்பாடேயாகும்.



தீக்கதிர்

2025 ஜூன் 18 புதன்கிழமை

வரலாற்றை வேட்டையாடுவதா?

ஒன்றிய ஆட்சியாளர்கள் விருப்பத்திற்கேற்ப கீழடி ஆய்வறிக்கையை திருத்தி எழுதித் தர மறுத்த காரணத்திற்காக தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இது ஒரு அதிகாரிக்கு எதிரான பழிவாங்கும் போக்கு மட்டுமல்ல, வரலாற்றையே பழிவாங்கத் துடிக்கும் வன்மத்தின் வெளிப்பாடேயாகும்.

கீழடி அகழ்வாய்வு குழுவிலிருந்து பணியாற்றிய அமர்நாத் ராமகிருஷ்ணன் தில்லியிலிருந்து நொய்டாவிற்கு தூக்கியடிக்கப்பட்டுள்ளார். இது வழக்கமான பணியிட மாற்றம்தான் என்று ஒன்றிய ஆட்சியாளர்கள் சப்பைக்கட்டு கட்டக் கூடும். ஆனால் தங்களுக்கு ஒத்து வராதவர்களை பழிவாங்குவது என்பதுதான் அவர்களது வழக்கம் என்பதை அனைவரும் அறிவர்.

ஒன்றிய அகழ்வாய்வு துறையின் சார்பில் கீழடியில் ஆய்வு மேற்கொண்டிருந்த அவரை

கீழடி அகழ்வாய்வு குழுவிலிருந்து பணி யாற்றிய அமர்நாத் ராமகிருஷ்ணன் தில்லியிலி ருந்து நொய்டாவிற்கு தூக்கியடிக்கப்பட்டுள்ளார். இது வழக்கமான பணியிட மாற்றம்தான் என்று ஒன்றிய ஆட்சியாளர்கள் சப்பைக்கட்டு கட்டக் கூடும். ஆனால் தங்களுக்கு ஒத்து வராதவர்களை பழிவாங்குவது என்பதுதான் அவர்களது வழக்கம் என்பதை அனைவரும் அறிவர்.

ஒன்றிய அகழ்வாய்வு துறையின் சார்பில் கீழடியில் ஆய்வு மேற்கொண்டிருந்த அவரை 2017ஆம் ஆண்டே அந்த ஆய்விலிருந்து ஒன்றிய பாஜக கூட்டணி அரசு வெளியேற்றியது. அவர் மேற்கொண்ட ஆய்வின் முடிவுகளை அவர் எழுதக் கூடாது என்று கூறி வேறொரு அதிகாரியை எழுதுமாறு ஒன்றிய அரசு கூறியது. ஆனால் அமர்நாத் ராமகிருஷ்ணன் தாம்

ஆனால் அமர்நாத் ராமகிருஷ்ணன் தாம் மேற்கொண்ட ஆய்வின் முடிவுகளை தாம் எழுதுவதே பொருத்தம் என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த பிறகே ஆய்வறிக்கையை எழுத அவருக்கு அனுமதி கிடைத்தது. அப்படி அவர் எழுதிக் கொடுத்த அறிக்கையையும் கிடப்பில் போட்டு வைத்துவிட்டு தற்போது திருத்தி எழுதித் தருமாறு நிர்பந்தித்தனர். ஆனால் அதற்கு அவர் இணங்க மறுத்து விட்டார்.

இந்தநிலையில்தான், அவர் தில்லியிலிருந்து நொய்டாவிற்கு மாற்றப்பட்டுள்ளார். புனைவுகளையும், புராணங்களையும் வரலாறு என்று எழுதத் துடிப்பவர்களுக்கு பூமியிலிருந்து மேலெ ழுந்து வரும் பன்மைத்துவமிக்க நாகரிக வரலாறு ஏற்புடையதாகயில்லை. எனவே உண்மை வரலாற்றை வெளிக்கொணர போராடும் அதிகாரிகளை வேட்டையாடுகிறது ஒன்றிய பாஜக அரசு.

கீழடி அகழ்வாய்வு முடிவுகள் குறித்து இன்னமும் ஆதாரம் தேவை என்று கூறுபவர்கள்தான் இராமேஸ்வரத்திற்கு அருகில் ராமர் கட்டிய பாலம் அமெரிக்காவின் நாசா எடுத்த புகைப்படத்தில் தெரிகிறது என்று கதையடித் தார்கள். அது பவளப்பாறைகள்தான் என்று நிரூபிக்கப்பட்டபிறகும் வம்படி வழக்கு நடத்தி, சேதுக் கால்வாய்த் திட்டத்தையே முடக்கி வைத்துள்ளார்கள்.

அயோத்தி துவங்கி காசி, மதுரா என கோவில்களை தேடி தோண்ட உத்தரவிடுகிறார்கள். எதுவும் கிடைக்கவில்லை என்றாலும் மதவாதம் என்று கடப்பாறையை கீழே போட மறுக்கிறார்கள். இல்லாத சரஸ்வதி நதியைத் தேட கோடிக்கணக்கில் செலவழிக்கிறார்கள். ஆனால் மறுபுறத்தில் வெளிவந்த வரலாற்றை புதை குழியில் தள்ள முயல்கிறார்கள். அமர்நாத் ராம கிருஷ்ணனின் பணியிட மாற்றம் ரத்து செய் யப்பட்டு கீழடி அகழ்வாய்வை அவரை தொடரச் செய்வதோடு அவரது ஆய்வறிக்கையும் திருத்தமின்றி வெளியிட வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏழாஞ்சேரி கெ. வரதன்

### ஜூன் 19 (2003)



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்திலும் பின்னர், கழகம் துவங்கிய பின், கிளைச் செயலாளர், செய்யாறு வட்டச் செயலாளர், வெம்பாக்கம் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1977–ல் காஞ்சிபுரத்தில் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற அண்ணாவின் "நீதிதேவன் மயக்கம்" நாடகத்தில் நடித்தவர்.**

**ஊராட்சி மன்றத்தில் தலைவர், துணைத் தலைவர், கூட்டுறவு சங்கத் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் என பல்வேறு பதவிகள் வகித்தவர்.**

**பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற 'இந்தி எதிர்ப்பு போராட்டத்தில்' காஞ்சிபுரம் அருகே உள்ள நத்தப்பேட்டையில் ரயில் மறியலில் ஈடுபட்டு ஆறுமாத கடுங்காவல் தண்டனையை கடலூர் சிறையில் அனுபவித்ததோடு, நெருக்கடி கால மிசாவில் கைது செய்யயப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர்.**


**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா.பா. சாரதி

### ஜூன் 19 (1976)



**வடாற்காடு மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும் – மாவட்ட அவைத்தலைவராகவும் பணிபுரிந்தவர்.**

**வேலூர் நகர்மன்றத்தில் இருபது ஆண்டு காலமாக உறுப்பினராகவும், மூன்று முறை நகராட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியவர்.**

**தமிழக சட்டப்பேரவைக்கு இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பத்தாண்டு காலம் சட்டமன்றப் பணிகளை செவ்வனே ஆற்றி, தாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி மக்களுக்காக பேரவையில் வாதாடி, குறைபாடுகளை நிவர்த்தி செய்தவர்.**

**"பெயரால், புகழால், வல்லமையால், செல்வாக்கால், உருவத்தால் யானையென அவர் இருந்தாலும், கழகத்தின் கட்டளையெனும் அங்குசத்துக்கு அடங்கியன்றோ பணி குவித்தார்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**